நல்லூரின் வீதியில் நடந்தது யாகம்
நாலுநாள் ஆனதும் சுருண்டது தேகம்
தியாகத்தின் எல்லையை மீறிய பிள்ளை
திலீபனை பாடிட வார்த்தைகள் இல்லை

பாடும் பறவைகள் வாருங்கள்
புலி வீரன் திலீபனை பாடுங்கள் 2
தியாகத்தில் ஆகுதி ஆனவன் நாமத்தை
ஆயிரம் ஆயிரம் காலங்கள் பாடுங்கள் 2

இந்திய ஆதிக்க ராணும் வந்தது நீதிக்கு சோதனை தந்தது
நாங்கள் சிந்திய ரத்தங்கள் காய்ந்திடும் முன்னரே கால்களில் வீழ் என சொன்னது 2
வேங்கைகள் இதை தாங்குமோ குண்டை ஏந்திய நெஞ்சுகள் தூங்குமோ
வீரன் திலீபன் வாதாடினான்
பசி தீயில் குதித்து போராடினான் 2

பாடும் பறவைகள் வாருங்கள்
புலி வீரன் திலீபனை பாடுங்கள் 2

வாயில் ஒரு துளி நீரதும் இன்றி. வாசலில் பிள்ளை கிடந்தான்
நேரு பேரனின் தூதுவன் ஏன் என கேட்காது ஆணவத்தோடு நடந்தான்
சாவினில் புலி போனது தமிழ் ஈழமே சோகமாய் ஆனது
பார்த்து மகிழ்ந்தது ராணுவம்
புலிச் சாவுக்கு ஆதிக்கம் காரணம் 2

பாடும் பறவைகள் வாருங்கள்
புலி வீரன் திலீபனை பாடுங்கள் 2

அன்னிய நாடிது ஆயினும் நீ இங்கு ஆதிக்கம் செய்திட வந்தாய்
எங்கள் மன்னன் திலீபனின் கோரிக்கை யாவையும் ஏளனம் செய்துமே கொன்றாய்
தாகத்தோடு புலி போனது தமிழ் சந்ததி சூடு கண்டது
நெஞ்சினில் ரத்தம் வளிந்தது
உந்தன் ஒப்பந்தம் இங்கு கிழிந்தது 2

பாடும் பறவைகள் வாருங்கள்
புலி வீரன் திலீபனை பாடுங்கள் 2
தியாகத்தில் ஆகுதி ஆனவன் நாமத்தை
ஆயிரம் ஆயிரம் காலங்கள் பாடுங்கள் 2